**செ.வெ.எண்: 81** **நாள் 26.10.2017**

# பத்திரிக்கைசெய்தி

கரூர் மாவட்டம், அனைவருக்கும் கல்விஇயக்கம், உள்ளடக்கிய கல்வித்திட்டம் சார்பில், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்க பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார். இது குறித்து ‘‘பள்ளிமேலாண்மைக்குழுக்கள் மூலம் இயன்முறைபயிற்சியாளர்கள், தொழில்சார் பயிற்சியாளர், பேச்சுபயிற்சியாளர் முற்றிலும் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட உள்ளனர். அவர்களதுபணிதற்காலிகமானது. மதிப்பூதியமாக ரூ.15000/– வழங்கப்படும். இயன்முறை பயிற்சியாளர்கள் பணிக்கு பிசியோதெரபி இளங்களை படிப்பில் 50 சதவீதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். தொழில்சார் பயிற்சியாளர் பணிக்கு இளங்களை தொழில்சார் படிப்பில் 50 சதவீதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். பேச்சிப்பயிற்சியாளர் பணிக்கு இளங்களை கேட்பு மற்றும் பேச்சுத்திறன் அல்லது பி.எஸ்.சி பேத்தாலஜி படிப்பில் 50 சதவீதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் கல்வித் தகுதி சான்று நகல்களுடன் வரும் 06.11.2017 தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கவேண்டியஅலுவலகமுகவரி**

கூடுதல்முதன்மைக்கல்விஅலுவலர்,
மாவட்டத்திட்டஅலுவலகம்
அனைவருக்கும் கல்விஇயக்கம் (SSA)
அறை எண் 48, கூடுதல்கட்டிடம்
மாவட்டஆட்சியர் அலுவலகவளாகம்,
கரூர்.

**வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**